484

Regd. No. M. 1530

# BALAVINODINI

OR

## THE CHILDREN'S FRIEND

**An Illustrated Tamil Monthly for Children**

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

18 JAN 1924

Vol IV] NOVEMBER 1922 [No. 11

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

3L
LL,9Cmm2U,N14
M22.4.11
186459

Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

8617

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருடசந்தா தபாற்கூலி யுட்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ரூ. 2 0 0 |
| தனி சஞ்சிகை .. | ... விலை | ரூ. 0 2 6 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில்சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச்சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் சட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி. பி. யில் பெற்றுக்கொள்வதால் அணா மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.


6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ... | ரூபா. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ... | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ... | ,, | 3—0—0 |

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.




இறைவன் திருவருட் பெருமை.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4 | 1922௵ நவம்பர்௴ | பகுதி 11

## ஆரியராஜ சரித்திரம்

ஆரியநாட்டில் மங்கலமா நகரமென்றொரு திருநகரமிருந்தது. அது பூமிதேவிக்குத் திலகம்போல் விளங்கியது. அந்த நகரத்தை இராஜதானி நகரமாகக்கொண்டு ஒருவேந்தன் அரசு புரிந்து வந்தான். அவனுக்கு ஆரியராஜன் என்று பெயர் வழங்கியது. அவன் பகைவர்களுக்கு யமனைப்போ லிருந்தமையால் பகைவர் அவனுக்கு அடங்கிக் கிடந்தார்கள். அரசன் மகா நீதிமானாகையால் குடிகளுக்கு உடலும் உயிரும்போலிருந்து பரிபாலித்து வந்

186459

தான்; காருண்யத்தில் *கற்பகத்தருவைப்போ லிருந் தான். தானம், தருமம், தவம் இவை என்றும் நடை பெறப் பல வேள்விகளைச் செய்தான். போரில் பாண்டவருள் ஒருவனாகிய பீமனையும் கோடையில் கர்ணனையும் விற்போரில் விஜயனையும் ஒத்திருந்தான். ஆனால்நீதியோடு அரசுபுரிவதில் தனக்குத்தானே நிகராக விளங்கினான்.

பெரியோர்களிடத்தில் பணிவும் கல்வி கேள்வி களிலே தேர்ந்தவர்களிடத்தில் அன்பும் ஏழைகளிடத் தில் இரக்கமும் அரசனுக்குண்டு. அவன் தெய்வபக்தி யுடையவனாதலாலே கோவில்களைப் பழுதுபார்ப்பதும் புதிதாக அங்கங்குக் கோவில்கட்டுவதும் குளங்களைப் பழுதுபார்ப்பதும் இல்லாத இடங்களில் குளங்களை வெட்டுவிப்பதும் நந்தவனங்களை வைத்து வளர்ப்பதும் தன்னுடைய முக்கியமான செய்கைகளிலே ஒன்றாகக் கொண்டு செய்துவந்தான். அரசன் சிவபக்தனாதலினால் விபூதி ருத்திராக்ஷ மணிந்துகொள்ளத் தவறான். தன்னைச் சார்ந்தவர்களையும் அவ்வாறே அணிந்துகொள்ளும்படி வற்புறுத்துவான்; அணிந்துகொண்டிருக்கும் மெய்யடி யார்களைக் கண்டால் வணங்கி வரவேற்று வேண்டியவை களைத்தந்து உபசரிப்பான். சிவபெருமான் எழுந்தருளி யுள்ள ஸ்தலங்களில் விதிப்படி பூசைநடக்கவும் திருவிழா நடக்கவும் வேண்டிய செலவிட்டு வருவான். இதனால் அவ னைச் சிறந்த பக்திமான் என்று உலகம் புகழ்ந்தது.

நல்ல கல்விமானாதலால் இந்த அரசன் தன்னுடைய பகைவர், கள்வர், விலங்கு, புள் முதலிய எவராலும் எப்

* கற்பகத்தரு தேவேந்திரனுடைய உலகத்திலிருப்பது. அது யார் என்னென்ன விரும்புகிறார்களோ அவற்றையெல் லாம் தரும்.

பொழுதும் பயமுண்டாகாதபடி கண்ணை இமைகாப்பது போல் ஜனங்களைக் காத்துவந்தான்.

இப்படிப்பட்ட அரியபெரிய குணங்களோடு விளங்கியபடியால் அரசன் மகா உந்நதநிலைமையில் விளங்கினான். சிற்றரசர் தன்னை வணங்கி யேத்தவும் மேனகையைப் போன்ற மாதர்கள் இருபுறமும் நின்று கவரிவீசவும் அரம்பையை யொப்பார் அடைபேந்தி அருகே நிற்கவும் திலோத்தமையைப் போன்றவர்கள் நடனஞ்செய்யவும் முனிவர்கள் பல்லாண்டுகூறவும் கவிவாணர்கள் துதிகூறவும் வந்திமாகதர்கள் புகழ்ந்துபாடவும் அமைச்சர்கள் தன் குறிப்பின்வழியே நடக்கவும் வீரர்கள் தன்னைச் சூழ்ந்து நிற்கவும் பேரிகைமுதலிய வாத்திய முழங்கவும் சிங்காதனத்தமர்ந்து ஒருநாள் அரசன் தேசவிசாரணை செய்தான். விசாரணை முடிந்து எழுந்திருக்கையில் அரசன் தன்னுடைய நவரத்தின கிரீடத்தின் சிகரம் காணாமலிருக்கக்கண்டு, உடனே கண்கள் சிவக்கச் சினங்கொண்டு மந்திரிகளைநோக்கி, "இத்தனைநாளுமில்லாத புதுமை நடந்திருக்கிறதே என்ன இது? எப்படிக் கிரீடம் கெட்டுப்போயிற்று? உங்கள் காவலின்றிறம் நன்றாயிருக்கிறது?" என்றான். மந்திரிகள், எவ்வுயிர்க்கும் அன்னையைப் போன்றவராகிய தங்களுக்கும் துரோகம் செய்வார்களா? அப்படியிருக்கத் தங்கள் முடியின் சிகரத்தைக் கவர்பவன் யாவன்? இது ஏதோ அதிசயமாகத்தா னிருக்கிறது! நாங்களென்னசெய்வோம்! தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறோம்" என்றார்கள். இதைக்கேட்டதும் மன்னன் இது என்ன ஆச்சரியம் என்றெண்ணி மலைத்துப் பிறகு மந்திரிகளைநோக்கி, "என்னுடைய மாணிக்க

முடியை யெடுத்தவர்கள் கொடுப்பார்களாயின் அவர்களுக்கு அளவில்லாத ஸ்வர்ணம் கொடுப்பேன். அது வன்றி அவர்கள் எதைக்கேட்டாலும் சொடுப்பேன். அவர்களுக்கு நான் யாதொருதண்டனையும் விதிப்பதில்லை. இது ஸத்தியமான பேச்சு என்று கூறி இந்தப்படி பறைசாற்றுவாய் இப்பொழுதே" என்று கட்டளையிட்டு ஆசனத்தை விட்டெழுந்து அப்பாலே போனான். எல்லோரும், "ஐயோ, இது என்ன மாயம்? எப்படிப்போயிற்று கிரீடத்தின் சிகரம்; தெய்வச்செயலால் ஏதாவது நடந்திருக்குமோ ஒன்றுந் தெரியவில்லையே" என்று கூறிக் கொண்டார்கள்.

மறுநாள் அரசன் தன் பிரதான மந்திரியைத் தனியே அழைத்து, மணிச்சிகரத்தைக் கவர்ந்தவர்கள் யாராக இருப்பார்கள்? உன் புத்திக்குப் படுவதைச் சொல்லு" என்று கேட்டான். மந்திரி, "சபையில் யாவருமிருந்தார்கள். நாங்களும் அருகே இருந்தோம். வாளேந்திய வீரர்களும் உருவினகத்தியுடன் நின்றார்கள். இப்பொழுது அது காணமற் போயிருக்கிறது. அது எப்படி திருடக்கூடிய சமயமாகும்? ஆகையினால் அதுபற்றி என்மனத்தில் ஒன்றும் தோன்றவில்லை" என்றான்.

மன்னன் இதைக் கேட்டதும் கோபங்கொண்டு, "நன்றாயிருக்கிறது என் ராஜரீகம்? உங்கள் மந்திரத் தொழிலும் நன்றாயிருக்கிறது! என் முன் நில்லாதீர்கள்" என்று கூறிப் போய்விட்டான். மந்திரி, பேச அதுசமயமல்ல என்று எண்ணிப் பெருத்த யோசனையோடு திரும்பித் தன் மாளிகை சென்றான்.

மந்திரியை இவ்வாறு பிரிந்த அரசன், ஓர் அறைக்

குள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டு அங்குத் தரையில் படுத்துப் புரண்டு, "ஐயோ, முப்பத்திரண்டு அறங்களும் குறைவற நடத்தி, மநுவைப்போல் இந்த உலகத்தைப் புரக்கும் பாக்கியம் யாருக்குவாய்க்கும்? இத்தகைய வைபவம் வாய்க்கப்பெற்ற யான், நாளைய தினம் சிகரமில்லாத மகுடத்தைச் சிரசின்மேற்கொண் டால் உலகம் நகையாதா? வேறு புதிது செய்துகொள் வோமென்றால் அதில் பதித்திருந்த மணிகள்போல் மூவு லகத்திலும் கிடைப்பதரிதே. அந்தோ, இச்செய்தி என் பகைவருடைய செவியிலே பட்டால் நகையார்களா? இனி நான் உயிர்தரித்திருக்கவும் வேண்டுமா? அநேக படைகள், காவலாளிகள், மதிமந்திரிகள், உயிர்க்குயிரான குடிகள், அநேக உறவினர் இவர்கள் எல்லோருமிருந்தும் என்னபயன்? திருடரால் வரும் இடையூற்றை நீக்கமுடி யாத நான், என்னையே துணையாக நம்பியிருக்கும் குடிக ளுக்கு நேரிடும் இடையூறுகளை எவ்வாறு நீக்குவேன்? ஐயோ சிவபெருமானுக்கு என்மீது கருணை சிறிதுமில்லை போலிருக்கிறது." என்று எண்ணிக் கரங்குவித்து நின்று

ஈசனேபெருங் கருணைக் கடலே சிந்தா
மணியே யெந்தா யன்பர்
நேசனே இமையவர் தம்குலக் கொழுந்தே
தெள்ளமுதே நிமல வாழ்வே.
நாசிநீங் கியமுகமும் விரலிழந்த பாணியும்வெண்
நகையில் வாயும்
மாசில்மணிச் சிகரமிலா முடியுமொப்பாம்
இக்குறையை மாற்று வாயே.

தனக்குநிகர் செழுஞ்சுடரே தந்தையுமாய்
எவ்வுயிர்க்குந் தாயு மான
உனக்குவழி வழியடிமை யாய்ச்சைவ
சமயத்தி லுதித்தேன் நீறும்

18645

எனக்கினிய கண்மணியு மணிவேனின்
மெய்யடியா ரேவல் செய்வேன்
மனக்கினிய நின்னுமம் ஐந்தெழுத்தும்
மொழிவேன்யான் வருந்த லாமோ.

அடியேனு மடியேன்றன் குடிமுழுதும்
நினக்குவழி யடிமை யென்று
படியேழு மறியும்நின தஞ்செழுத்தும்
கண்மணியும் பரவு நீறு
மடியாமெய்ப் பொருளாக் கொண்
டுவகைமறை நெறிபுரக்கும் வகையாற் றோர்
கடியாமன் றுறைவாயென் றுயர்கேட்டோர்
நின்னையன்றோ நகைப்பா ரையா.

இன்புறுநின் னடியார் கூட்டத் தொருவர்
முதலையுண்சே யினையுந் தந்தார்
வன்புறுநீ முடிச்சிகா மறைத்தவர்பாற்
கவர்ந்தெனக்கு வழங்கென்றேன் மெய்
அன்பர்களுக் கெளியேன்யான்
அவர்வலிமை யெனக்கிலையென் றறைவாயானுற்
றுன்புறுமென் னுவியையா னினிச்சுமக்கே
னிப்போதே துறப்பே னையா.

புறம்பொடித்த நகையாவோ
கூற்றுதைத்த தாளவோ பூவின் மேயோன்
சிரந்தடித்த கையாவோ
மதிலெரித்த கண்ணுவோ செழியன்மேனிச்
சுரந்தணித்த நீற்றுவோ
நஞ்சடக்கு மிடற்றுவோ தூயகங்கை
கரந்தடக்கும் சடையாவோ
என்செய்வே னென்செய்வேன் கடையேனையா

என்று பாடித் துதித்து, மகாமகிமை வாய்ந்தவராகிய உமக்கு எனது முடிச்சிகரத்தை மீட்டளித்தல் ஒரு பெரிதா? அப்படிப்பட்ட வலிமை எனக்கில்லை யென்பீராகில் நான் இக்கணமே உயிர் துறந்துவிடுகிறேன். நான் இனி இந்தப் புவியைப் புரப்பதில்லை. யாரேனும் அரசுசெய்க. நான் வனமேகித் தவம்புரியச் செல்வேன்'' என்று தன்

அரசைவெறுத்து மிகவும் வருந்தி ஈசனை நொந்துகொண் டான். பிறகு அடுத்த கணத்தில் வெளியேவர நினைந்து அறைக்கதவைத் திறந்தான். அங்கொரு பிராமணரிருந் தார். அவரைக்கண்ட அரசன் திடுக்கிட்டான். அவரு டைய அழகு அரசன் கண்களைக் கவர்ந்தது. அரசன் பிரமித்து நின்றான். அப்பொழுது அந்தப் பிராமணன் "மன்னா, நீ சிறிதும் அஞ்சாதே, அஞ்சாதே, உனது முடிச்சிகரம் வாட்போக்கியி லெழுந்தருளிய அமலனிடத் திலிருக்கக்கண்டேன். நீ அவனிடம் போய்ப் பெற்றுக் கொள். அவன் இதுவன்றி நீவிரும்புவ தெதுவாயினும் அளிப்பான்" என்று கூறி மறைந்தருளினார்.

அந்தணர் மறைந்ததும் வந்தவர் சிவபெருமானே னவே கண்டு பரமானந்தமடைந்து அவரைத் துதித்துப் பின் அமைச்சர்களை வரவழைத்துத் தான் கண்டகாட்சியை யும் தனக்கு அந்தணராகவந்தவர் கூறியருளியதையும் புகன்று உடனே வாட்போக்கி என்னும் திவ்யஸ்தலத் துக்குப் புறப்பட அரசன நிச்சயித்தான்.

வாட்போக்கியென்பது காவிரிநதி தீரத்திலே குழித் தண்டலை யென்னும் ஊருக்கு நேர் தெற்கே ஏழாவது மைல் தூரத்திலுள்ள சிவஸ்தலம். அந்த ஸ்தலத்தில் சிவபெருமான் ஒரு மலைமீது திருக்கோயில் கொண்டிருக் கிறார். அந்தமலைக்குச் சிவாயமலையென்றும் இரத்தின கிரியென்றும் ஐயர் மலையென்றும் மாணிக்க மலையென் றும் பெயருண்டு. குழித்தண்டலையில் கடம்பந்துறை என்கிற ஒரு சிவஸ்தலமிருக்கிறது. இதுவும் இரத்தின கிரியும் பாடல்பெற்ற ஸ்தலங்கள்.

இந்தத் திவ்யஸ்தலங்களில் அநேகர் திருவிழாக்

காலங்களிலே கூடுவார்கள். வாட்போக்கிக்கு வருகிறவர்கள் கடம்பந்துறை வராமலிருக்கமாட்டார்கள். கடம்பந்துறைக்கு வந்தவர்கள் வாட்போக்கிக்குப் போகாமலிருக்கமாட்டார்கள். கடம்பந்துறைக்கு வடக்கே காவேரிநதிக்கு வடகரையில் ஈங்கோய்மலை என்று ஒரு சிவஸ்தலமிருக்கிறது. பக்தர்கள் இங்கேயும் சென்று சிவபெருமானை வணங்குவார்கள்.

ஆரியராஜன் தான் தீர்மானித்தபடி ஒரு நல்லநாளில் வாட்போக்கி ஸ்தலத்துக்குத் தன் புதல்வனோடும், மந்திரிமுதலிய பரிவாரங்களோடும் உறவினரோடும் இரதங்களிலேறிப் படைவீரர் புடைசூழப் புறப்பட்டான். பல காடுகள், வனங்கள், வனாந்திரங்கள் யாவும் கடந்து தொண்டைநாட்டையடைந்து காஞ்சிமுதலான ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு பிறகு திருவெண்ணெய் நல்லூர், சிதம்பரம், வைத்தீசுவரன் கோயில், மாயூரம், ஆடுதுறை, குடந்தை, சம்புகேசுவரம், சிரகிரி, திரும்பராய்த்துறை, கடம்பந்துறை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு காவேரி நதியில் ஸ்நானம்செய்து ஆரியராஜன் தென்றிசை நோக்கினான்.

மாணிக்கமலை தெரிந்தது. உடனே அரசன் இரு கரங்களையும் சிரசின்மேலே கூப்பிக்கொண்டு தொழுது மனமகிழ்ச்சியோடு ஈசனைத் துதித்துக்கொண்டே எல்லாருடனும் கால்நடையாகப் புறப்பட்டு அத்தலத்தையடைந்து அங்கு அடிவாரத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்திலே தங்கினான்.

முத்தி வேண்டினும் அளிப்பது மொழியிரு நான்கு
சித்திவேண்டினுந் தருவது சிவபிரான் மலர்த்தாட்

பத்திவேண்டினு மீவது பகர்குசைநுனிநேர்
புத்திவேண்டினுங் கொடுப்பதிப் புண்ணியத்தலமே.

என்று அந்தத் தலவாசிகள் அத்தலத்தின் சிறப்பைப் பற்றிப்பேசினார்கள். அரசன்கேட்டு, "என் ஐயன் இந்தத் திவ்யஸ்தலத்துக்கு வரும்படி ஆணையிட்டது என் பாக்கியமேயாம்" என்று மகிழ்ந்தான்; அப்பால் அங்குள்ள தீர்த்தங்களிலே நீராடிப் பரிசுத்தமாய் எல்லோருடனும் மலைமீதேறிப்போய் ஆலயகோபுரங் கண்டு தொழுதுவணங்கித் துதித்துக்கொண்டே உள்ளேபோய் வலம்வந்து பணிந்து ஸந்நிதிக்குச்சென்று சிவபெருமானைத் தரிசித்து இருகரங்களையும் சிரமிசை குவித்து நின்று.

"கண்ணேயென் கண்மணியே கருணைப் பெருங்கடலே
தண்ணேர்தண் மதிசூடும் சம்புவே சங்கரனே
எண்ணார்புரமெரித்த வெந்தையே வாட்போக்கி
அண்ணா நின்றனையல்லால் அடியேனுக் கார்துணையே"

என்றுதுதித்துப் பரவசமானான்.

இப்பொழுது சிவபெருமான் லிங்கத்தின் பின்புறம் ஒருவேதியனைப்போல் தோன்றி அரசனைப்பார்த்து, "நீ யார், உன்பெயரென்ன? நீ இங்கே எதைவிரும்பிவந்தாய்? என்றுகேட்டார். அரசன், "நான் ஆரியநாட்டிலுள்ள மங்கலமா நகர்வேந்தன். எனது முடிச்சிகரம் காணமற்போயிற்று. இது இங்கிருப்பதாகக் கேள்விப்பட்டு இங்கேவந்தேன்" என்றான். பகவான், "வேந்தே, எனது கனவில் ஈசன்தோன்றி ஆரியநாட்டு மன்னன்வருவான். வந்தால் அவனை இந்தக் கொப்பறை நிறையக் காவிரி நீர் கொண்டுவந்து கொட்டும்படிசெய். கொட்டியபிறகு நமது வைப்பறையிலிருக்கும் மணிமுடிச் சிகரத்தைக்கொடு,

என்றுகட்டளையிட்டார். ஆகையினால் நீர் அவ்வாறு செய்தால் உமது மணிமுடிச் சிகரத்தை அடையலாம்'' என்றார்.

அம்மொழிகேட்ட அரசன் "வேதியரே, என்னையாட்கொண்ட இறைவனுக்கு இப்பணிபுரியநான் என்னதவம் செய்தேன். தங்களுடைய பேச்சை தேவகட்டளையாகக் கொள்கிறேன்'' என்று கூறிப் பரம சந்தோஷத்துடன் அங்கிருந்த குடத்தை எடுத்துக்கொண்டு மூன்றுநாழிகை வழி தூரத்திற்கப்பாலிருக்கும் காவிரிக்குப்போய்த் தீர்த்தம் கொண்டுவந்து கொட்டினான். என்னசொல்வ தவனுக்கிருந்த அன்பை! கணக்கற்றகுடம் ஜலங்கொண்டுவந்து கொட்டினான். சிரமத்தைக் கருதவேயில்லை. அன்பு என்கிற ஆவேசத்தினால் வேலைசெய்தான். செய்தும் அந்தக் கொப்பறை நிரம்பவில்லை. என்னசெய்வான் வேந்தன்; அந்தணனைப்பார்த்து, "என்ன ஐயா இது இன்னும் நிரம்பவில்லை? இதில் அடியில் பொத்தலிருக்கும் போலிருக்கிறதே! இப்படியும் செய்யலாமா?''. என்று கேட்டான். ஈசனாகியவேதியர், "மன்ன, பொத்தலில்லை. இந்தத்தடவை நதிக்குப்போய் ஜலங் கொண்டுவந்து கொட்டினால் நிறைந்துவிடும்'' என்றார். வேந்தன், இதைக்கேட்டதும் "இது ஏதோ இறைவன் சோதனையாயிருக்கிறது. கவனிப்போம்'' என்றெண்ணிப் பழையபடி ஜலங்கொண்டு வந்துகொட்டினான். மீண்டும் அந்தக்கொப்பறையில் ஜலம் கொஞ்சம் குறைந்தது. அப்பொழுது அந்தணர் "அதையும் நிரப்பினாலல்லாமல் மணிமுடிச் சிகரத்தை அளித்திடேன்'' என்றார்.

அப்படிச்சொன்னதும் வேந்தன் வெகுண்டு, "ஐயா! உமதுமனம் கல்லா? இரும்பா? ஏன் சிறிதும் இரக்கமில்

லாமல் என்னை இப்படிக்கஷ்டப்படுத்துகிறீர்?" என்றுகேட்டான். அந்தணர், "நான் கூறியபடி செய்துமுடித்தாலன்றி உனது மணியைக் கொடேன்" என்றார். உடனே அரசன் தன் வாளையோங்கி வேதியன் தலையைநோக்கி வீசினன். அந்தணர் சடக்கென இலிங்கத்துள் மறைந்துவிட்டபடியால் அந்தவாள் லிங்கத்தின்மீது பட்டது.

வெட்டு விழுந்ததும் லிங்கத்தின் முடியிலிருந்து இரத்தம் மளமளவென்று பெருகத்தொடங்கிவிட்டது. அதைக்கண்டதும் அரசன் மனம்பதறி "ஐயோ, நானென்னகாரியம் செய்தேன். மகாபாவியானேனே!" என்று முகத்திலறைந்துகொண்டு தரையில் விழுந்தழுதான்; பின்பு எழுந்து சிவலிங்கத்தைத் தன் இருகாத்தாலுந்தழுவி "ஐயனே, பாவியாகிய நான் இங்கு இதற்காகத்தான் வந்தேனோ ?" என்றலறி மெய்பதைத்துக் கண்ணீர்சொரிந்து துயரமுற்றுத் தன்னுடைய வஸ்திரத்தால் பரமனது திருமுடியிலிருந்து ஒழுகும் இரத்தத்தைத் துடைத்தான். துடைத்தும் இரத்தம் மேன்மேலும்பெருகிக்கொண்டே இருந்தது. இதைக்கண்டு அரசன் பெருந் துயரப்பட்டு, "இனி நான் என்னசெய்வேன். இந்தப் பொய்யுடலைத் துறப்பேனல்லது சுமக்கேன்" என்று கூறி அங்கிருந்த கல்லில் தன்னுடைய சிரசைமோதிக் கொள்ளச் சென்றான். உடனே சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து தோன்றி "அன்பனே நில்லு நில்லு!" என்று கூறித்தடுத்தார்.

அடியார்க்கு இரங்கும் அமலமூர்த்தி இவ்வாறு தடுத்ததும் இலிங்கத்தில் இரத்தம் வருவது நின்றுவிட்டது. இதைக்கண்ட வேந்தன், 'ஐயனே சரணம்! அருள்புரிந்த

ஈசனே சரணம்' என்று கூறி இரண்டுகரங்களையும் சிரசின் மேற்கூப்பித்தொழுது, துதிசெய்து, "கருணையங்கடலே, சினந்து வாளால் வெட்டிய தீமையைமறந்து என்னையாட் கொண்ட நினக்குயான் என்னகைம்மாறு செய்யப்போகின் றேன்?" என்று கூறிக் கண்களில் அருவிபோல் நீர்பெருக நின்றான்.

சிவபெருமான், "மன்ன, வருந்தாதே, உன்பக்திக்கு மெச்சிய நாம் உன்னுடைய அந்தப் பக்தியை உலகுக்குக் காட்டவேண்டி இவ்வாறு இங்கு அடிமைகொண்டோம். உனது மணிமுடிச் சிகரத்தைக் கவர்ந்த கள்ளன் நாமே. ஆதலின் நீ எம்மை வாளால் வீசித் தண்டித்தாய்; இதி லென்ன பிழையிருக்கிறது? வருந்தாதே இனி உனக்குப் பிறவிகிடையாது. நீ இன்னும் சிலகாலமிருந்து அரசு செய். பிறகுன்மகனுக்குப் பட்டங்கட்டிவைத்து உன்னை யெமது திருவடியைவிட்டுப்பிரியா நெறியில் வைப்போம்" என்று திருவாய்மலர்ந்து, "உனக்கு வேண்டியவரங்களைக் கேள்" என்றார்.

என்னசொல்வது அரசனுக்குண்டான மகிழ்ச்சியை. "ஆகா! இப்படியும் ஒரு தெய்வமுலகிலுண்டா? என்ன கருணை! என்ன கருணை! யான்செய்த தவம் யார்செய்யப் போகிறார்கள். இந்த உலகத்தில் யாருக்குக் கிடைக்குமிப் படிப்பட்ட பாக்கியம். அன்பனை யாட்கோள்ள ஐயன் கள்ளனான கதை எங்கேனும் நடந்ததுண்டா? கள்ளனான துமன்றி இதற்குத்தண்டனையாமே! என்னவிநோதமிது? என்றுகூறி மெய்மறந்து உடனே நினைவுற்று ஈசனைச் சாஷ்டாங்கமாக மூன்று முறை தண்டனிட்டெழுந்து, நின்று, "என் ஐயனே, என் குலத்தவர்கள் உனக்கு எப் பொழுதும் பொன்னி (காவிரி) நீர் கொண்டுவந்து அபி ஷேகம் செய்விக்கவேண்டும். முடிவில் அவர்கள் நற்கதி பெறவேண்டும். ராஜலிங்கம் என்கிறபேர் உனக்கிருக்க வேண்டும். இந்தமலைக்கு மணிவரையென்கிற பெயரிருக்க

வேண்டும். உன்னைத் திருமுடித் தழும்பனென்று யாவரும் துதித்திடல் வேண்டும். உனக்கு அபிஷேகதீர்த்த மெடுக்கக் குடமளிப்பவரும் பொற்கொப்பறை செய்துவைப்போரும் தீர்த்தமெடுத்து வருவோரும் இந்த வையகத்தில் மிகுந்த செல்வவான்களாக விருந்து உனது இணையடியை வாழ்த்திடல்வேண்டும்.

ஈசனே, தங்கள் திருவுளப்படி நான் இப்புவியில் சில காலமிருந்து அரசுபுரிந்தபின், தமது திருவடி சேரவேண்டும். என் புதல்வனையும் அடிமையாகக்கொண்டு என்றும் காத்தருளவேண்டும்.'' என்று கேட்டான்.

பக்தபராதீனனும் பார்வதி நாதனுமாகிய பரமசிவன், "வேந்தனே, நீ விரும்பியவரங்களை யெல்லாம் தந்தோம் ?'' என்றுகூறி உடனேமறைந்தார்.

அரசன் பிறகு இறைவன் ஸந்நிதியைவிட்டுப் பிரிய மனமில்லாமலே பிரிந்து அம்மன் ஸந்நிதிக்குப் போய்த் தேவியை வணங்கி வலம்வந்து துதித்து மலையிலிருந்து கீழே இறங்கி எல்லோருடனும் ஆரிய நாட்டுக்குப் புறப்பட்டான். அரசனுடைய பக்தியைக் கண்டவர்களும் கேட்டவர்களும் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். அரசன் பரமாநந்த பரிதனாய் ஊர்வந்து, எல்லோருக்கும் சிவபெருமானுடைய இந்தத்திருவிளையாடலைக் கூறி அவர்களையும் சிவபக்தர்களாக்கிக்கொண்டு சுகமாக அரசுபுரிந்துவந்தான்.

குழந்தைகளே, ஸர்வலோகசரண்யனாகிய சிவபெருமான் தன்பக்தர்களுக்கு அநுக்கிரகம் செய்த அழகைக் கவனித்தீர்களா ? இவ்வாறு சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் அநந்தமுண்டு. ஜகதீசன் கண்ணப்ப நாயனாருக்குக் காட்டிய கருணையை நீங்கள் முன்னே படித்தீர்களல்லவா ;—சிறுவர்களே, நீங்கள் கடவுளுக்கு அன்புடையவர்களாக விளங்குங்கள். என்றும் குறைவுவராமல் அவர் காப்பாற்றுவார்.

---

# பாலவிநோதினியின் சிறப்பு.

## கீர்த்தனை—1.

### பல்லவி

பிள்ளைகாள்! இந்தப் பாலவிநோதினியே
நல்ல-பேருந்தரும்-சீருந்தரும். (பிள்)

### அநுபல்லவி

வெள்ளைமதிவிட்டு-மெள்ள இதைத்தொட்டுப்
பள்ளியில் வீட்டினில் உள்ளம் இசைந்திட்டு
விதியொடுபயில்-வது செயின் ஒயில் (பிள்)

### சரணங்கள்

1. உலகநடையுற்றிங் கிலகப்பண்ணும் மற்றும்
சலகவினைப்பற்றை விலகச்செய்யும் முற்றும்
பலவண்மையும்—குலவுண்மையும்
பயனுறு மொரு—நயனது தரும். (பிள்)

2. சேலனிராஜகோ பாலனன்னேசமோ
டேலச்சிலாகிக்கப் பாலரும்மோகிக்க
வாலறிவிற்புவி மேலுறவே நவில்
வரகவிசுப்-பிரமணிய
பாரதிதரும்—நேரதில் வரும். (பின்)

---

## கீர்த்தனை—2.

### பல்லவி

பாலவிநோதினி போலிந்தமேதினி
பாலிக்கும் நூலுமுண்டோ? (பால)

### அநுபல்லவி

சாலப்பாலர்மதி ஆலிற்றழைப்பதில்
சாவித்திரியும் நாண—மேவித்துணையாய்ப்பூண (பால)

### சரணம்.

பாலர்தம் விர்த்திக்கு ஞாலத்தில் வேண்டிய
கோலத்தில் ராஜகோ பாலனுந்தூண்டிய
வாலறிவையூட்டும் சீலமதைக்காட்டும்
வரகவி சுப்பிரமணியத் திரனுறுபாரதி *பணியிப் (பா)
(பணித்தல்—இயற்றல்

## பாலவிநோதினியைப் படிக்கும் பாலர்கள் பாடும் பாடல்

---

### கீர்த்தனை—3.

#### பல்லவி

பாலவி நோதினியைப் படிக்கத் துணிவு பூண்டோம்
பாக்கியந் தனையாண்டோம் (பாலர்கள் நாங்கள்) (பால)

#### அநுபல்லவி

ஞாலவி நோதத்திலே நாள்கழிப் பதைவிட்டோம்
நால்வருங் கொண்டாடும் நலமதில் தலையிட்டோம். (பால)

#### சரணங்கள்

1. குலத்தை விளக்க இந்தக் குவலயத்தில் பிறந்தோம்
கூறுநற் செயலிலும் குணத்திலு மேசிறந்தோம்
நிலத்தில் பழிபாவங்கள் நேருந் தொழில் மறந்தோம்
நேயம் ஈகை இரக்கம் நிலைக்கக் கண்ணைத் திறந்தோம் (பா)

2. தாயைத் தந்தையைக்கல்வி தந்த குருவை எம்மைச்
சார்ந்த உறவைத் தேவைத் தக்க பெரியோர் தம்மை
வாயை மனதை மெய்யை வணக்கித் தொழுது வெம்மை
வார்த்தை எங்கும் வராத வைபோகந் தந்த செம்மைப் (பா)

3. பாலவ யதில் வரற் பாலதாகிய ஈன
பழக்க மொழிக்கச் செய்யும் பரிசினிற் பேர்போன
மாலிராஜகோபாலன் மனதுக் கிசைந்த தான
வரகவி சுப்ரமண்ய பாரதி தரும் ஞான. (பால)

#### நாமாவளி


பாலவிநோதினியே பத்திரிகை—அதைப்
படிப்பவர்க்கே வரும் சத்திரிகை.

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

# 2. ஆறுவது சினம்

இராவணன் என்பவன் இலங்கைதேசத்துக்கு இராஜன். அவன் ஒருநாள், காட்டிற்கு வந்திருந்த சீதையை, அச்சீதையின் புருஷன் இராமர் இல்லாத சமயம்பார்த்துத் திருடிக்கொண்டு போய்விட்டான். இதை அறிந்த இராமர், இலங்கைக்குச்சென்று இராவணனுடன் சண்டைசெய்தார். அவன் கையிலுள்ள ஆயுதங்களை யெல்லாம், தன்னுடைய ஆயுதங்களினால் கெடுத்துவிட்டார். இராவணன் ஓர் ஆயுதமும் இல்லாமல் வெறுங்கையோடு நின்றான். இராமர் தம்கையில் உள்ள ஆயுதங்களினால் இராவணனை உடனே கொன்றிருக்கலாம். 'அவனைக்கொல்லவாவந்தோம். சீதையை மீட்டுக்கொண்டுபோக வல்லவோ வந்தோம். சண்டைசெய்தோம். போகிறான், சீதையைக் கொண்டுவந்துவிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் போதும்' என்று இராவணனைப் பார்த்து, "இராவணா! இப்போது உன்னை இலகுவாகக் கொன்றுவிடலாம்—வேண்டாம். ஓர் உயிரைக் கொல்லுவது பாபம். நீ என் பெண்சாதியைக் கொண்டுவந்து விட்டுவிடு. விட்டுவிடப்பிரியமில்லாவிட்டாலும் உன்கையில் ஓர் ஆயுதங்கூட இல்லையே. ஆதலால் நீ இன்று உன் வீட்டுக்குச்செல். நாளைக்கு ஆயுதங்களோடுவா சண்டைசெய்யலாம். ஆயுதமில்லாதவரோடு சண்டைசெய்வது மிகப்பாவம்" என்று, தன் பெண்சாதியைத் திருடிக்கொண்டுபோன திருடனென்று கொஞ்சங்கூடக் கோபப்படாமல் கூறினார்.

நம்மிடம் ஓர் ஆயுதமும் இல்லாமல் இருப்பதற்கு



அகங்கா ரங்கோள் வதழகல்ல.
(352-ம் பக்கம் பார்க்க.)

வேறு ஒருவராய் இருந்தால் இந்நேரம் கொன்றிருப் பாரே. பெண்சாதியைத் திருடிக்கொண்டுபோன திரு டனுச்சே என்ற கோபம் கொஞ்சமாவது இருந்ததா? எவ்வளவு தயாளகுணம். ஏன் இவர் மனைவியைத் திருடி ேனும். திருடினது பிசகு. மன்னிக்கவேண்டும் என்று சொல்லி, சீதையைக் கொண்டுபோய் விட்டுவிடலாமா?— என்றும் இராவணன் எண்ணினனும். எந்தத் திருடனு வது திருடியதைத் திருப்பிக்கொடுத்துவிடச் சம்மதிப் பானு? கோபம் இல்லாத இராமரின் இளகிய மனத்தி னல் அல்லவா, இராவணன் சம்மதித்தான். சம்மதித் தாலும் அடுத்த நிமிஷமே அந்த எண்ணம் நெடுநாள் பழகிய கெட்ட எண்ணத்தால் மாறிவிட்டது.

கோபம்வராமல் செய்துகொண்டால் எப்பேர்ப்பட்ட வரும் நம் இஷ்டப்படி நடப்பார்கள் அல்லவா? இதுதான் நம்மிடத்தில் உள்ள சாந்தசக்தி. கோபமில்லாத இந்த சாந்தசக்தி நம் ஒவ்வொருவரிடமும் ஏற்பட்டுவிட்டால் நாம் எவ்வளவோ காரியங்களைச் சாதித்துவிடலாம். நமக் குப் பிறர், விரோதிகளாயினும் கெடுதிசெய்யவும் எண்ண மாட்டார்கள் அல்லவா? இந்தக் கதையிலிருந்து நாம் இனி கோபப்படாமலும் கோபம் வராமலுஞ்செய்து, கோபத்தை விலக்கிச் சாந்தசக்தியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிந்துகொண்டோம். ஆத்திசூடி யில் **ஆறுவதுசினம்** என்றதும் இதற்காகவே. சினமாகிய கோபம் அடங்கவேண்டும். நீங்கவேண்டும் என்று சொல்லாமல் **ஆறுவது** என்று சொல்வானேன் எனலாம். கோபத்தால் விளையும் தீமைகளைப்பற்றி முன்னெரு சம யம் **பரிகாசம்** என்றகதையில் கூறியிருக்கிறேன். அவ்

வளவு தீமைகளும் கோபத்தின் கொடூரமான அக்கினிஜ்வாலைபோன்ற குணமேயாம். அக்கினியின்ஜ்வாலை அடங்கினால் அக்கினியின் வேகமும் அடங்கும். வேகம் அடங்கி அக்கினி ஆறினால் அதன்தீமை அகலும். அக்கினி ஒரு வீட்டிலோயாதா மொன்றிலோ பற்றினால் ஒன்றையும் பாக்கி வைக்காததுபோல் கோபம் கொஞ்சங்கூடத் தாட்சண்யமின்றிக் கெடுதியைவிளைவிக்குமாதலால் அக்கினிபோன்ற கோபமும் ஆறவேண்டும் எனப்பட்டது. கயிற்றின் முறுக்கு ஆறுவது, சுடுசாதம் ஆறுவது, வெந்நீர் ஆறுவது இவைகளெல்லாம் ஒருபெரிதல்ல. கோபம் ஆறுவதுதான் கடினம். ஆகவே, கோபம் ஆறினால் எல்லாம் ஆறும் என்பதற்காகவே ஆறுவதுசினம் என்று சொல்லப்பட்டது போலும். நீங்களும் இதை உணர்ந்து இவ்விதமே நடப்பீர்களாக. எல்லாம்வல்ல இறைவன் உங்களுக்கு இன்னருள் பாலிப்பாராக.

பரிமணப்பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர், போர்டுஸ்கூல், உத்தமசேரி,

---

## சமயோசிதமானயுக்தி.

---

III

ஒரு சமயம் பங்கஜம் என்னும் ஒரு மாது தன் வீட்டு விளக்குகளுக்கு எண்ணெய் (மண்ணெண்ணெய்-(Kerosin Oil) விட்டு விளக்குகளை ஏற்றிக் கீழேவைத்துவிட்டு எண்ணெய்ப் புட்டியை எடுத்து மேலே ஓரிடத்தில் வைக்கப்போனாள். அப்போது புட்டி கைதவறிக் கீழேவிழுந்து உடைந்து எண்ணெயெல்லாம் பங்கஜத்தின் புடவையின்மேலே கொட்டுண்டதுமல்லாமல் கீழே ஏற்றிவைத்திருந்த விளக்குகளிலும் விழுந்தது. உடனே தீ குபீலென்று கிளம்பியது. கிளம்பிய தீ பங்கஜத்தின் சேலையிலும் பற்றியது. எண்ணெயினால் நனைந்த புடவையாகையால் தீ சீக்கிரம் பரவியது. பங்கஜம் வெகு தைரியசாலி. மனோதிடமுள்ளவள்—குதிக்கவில்லை. ஓட

வில்லை. கத்தவில்லை. உடனே பக்கத்திலிருக்கும் முற்றத்திற்கு (Courtyard) வந்து கீழேபடுத்துக் கட கடவென்று புரண்டாள். இதற்குள் பக்கத்து அறையிலிருந்த பங்கஜத்தின் புருஷன் நெருப்பு வெளிச்சம் பார்த்து ஓடி வந்து தன் பெண்ஜாதியின் மேலெல்லாம் நெருப்புப் பற்றி எரிகிறதையும் அவள் கீழேபடுத்துப் புரண்டு கொண்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டு "ஐயோ பங்கஜம், பங்கஜம்" என்று அலறிக்கொண்டே பங்கஜத்தைத் தூக்கி எடுக்கப்போனான்.

பங்கஜம் தன்னை எடுக்கவரும் புருஷனைப் பார்த்து இவர் அலங்கோலமாயிருப்பதால் மேலேபோட்டுக்கொண்டிருக்கும் வஸ்திரத்தில் தீப்பற்றிக் கொண்டாலும் பற்றிக் கொள்ளும் என்று கருதிப் புருஷனைத் தன்னிடம் வர வேண்டாம் என்று சொல்லிவிட்டு மறுபடியும் புரண்டாள். இப்படித் தடுக்கப்பட்ட புருஷன்-ஜலத்தைக் கொண்டு வந்து கொட்டித் தீயை அவிக்கலாம் என்று கருதி ஓடிப்போய் ஒரு குடத்தில் ஜலத்தைக் கொண்டுவந்தான். குடத்துடன்வரும் புருஷனைப் பார்த்த பங்கஜம் "ஐயோ இவருக்கு ஒன்றும் தெரியவில்லையே, மண்ணெண்ணெய் பற்றி எரியும்போது ஜலத்தை ஊற்றினால் தீ அதிகமாக வல்லவா ஆகும்" என்று நினைத்துப் புருஷனைப்பார்த்து "ஜலம்வேண்டாம் தீ அவிந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள். பங்கஜம் இந்த ஆபத்துக்குத் தன்னைத் தப்புவித்த ஜகதீசனைத் தியானம் செய்து எழுந்து தனக்குப் பிரத்தியக்ஷ தெய்வமாகிய தன் கொழுநனைப் பணிந்து நின்றாள்.

குழந்தைகளே! பங்கஜம் மனோதிடமும் சமயோசிதமான தீவிர புத்தியுங் கொண்டிருந்ததனால் தான் கீழே விழுந்து புரண்டு தீயை அவித்துக் கொண்டதுமல்லாமல் ஜலத்தை ஊற்றித் தீயை அவிக்கவந்த புருஷனையும் தடுத்துத் தன்னுயிரைக் காத்துக்கொண்டாள். மண்ணெண்ணெய் தீப்பற்றி எரியும்போது ஜலத்தை ஊற்றினால் தீ அதிகமாகுமேயல்லாமல் அவியாது.

# சத்திமுற்றப்புலவர்

இவர் சத்திமுற்றம் என்னும் ஊரில் இருந்தவர்; கல்வி கேள்விகளில் தேர்ந்தவர். அந்தப் பாக்கியத்தினுல் இவருடைய பெயர் பிரசித்தி பெற்றது. இவருக்குப் பெற்றோரா லிடப்பட்ட பெயர் இன்னதென்று தெரியாமையால் இவர் குடியிருந்த ஊரின் பெயரையே இவருக்கு வைத்து ஜனங்கள் அழைத்து வந்தனர். சரஸ்வதியின் கடாக்ஷத்தைப் பூரணமாகப்பெற்ற இவருக்கு இலக்ஷ்மியின் கடாக்ஷம் மட்டுப்பட்டிருந்தது. அதனுல் இவர் தரித்திரத்தை அடைந்து மிகவுங் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் இவர் பாண்டிய ராஜனைக் கண்டு, தமது வித்துவத் திறத்தைக் காட்டி ஏதாகிலும் பொருள் பெற்றுவந்தால் நலமா யிருக்குமென் றெண்ணிஞர். வறுமைப் பிணி கொடியதல்லவா? அதன் சொரூபத்தைப் பற்றி மணவாள நாராயண சதகம்,

"துதிக்கின்ற மனைவியுங் குறைசொல்வள், தந்தைதாய் சோகமுறவசை கூறுவார்—துன்பமொடு மனமெலியும், மேனி வேற்றுருவமாம், தொலையாத கவலை வளரும்—உதிக்கின்ற புத்தியு மழுங்கிடும், கல்விபோம் உதாத்தி லதிகபசியாம்—உறவின் முறையாரு மொருவார்த்தை சொல்லார், சொன்ன உத்தாமு மொருவர் கேளார்—விதிக்கின்ற உலகத்தில் எல்லாரும் இகழுவார், *மிடிவந்து சேர்ந்ததென்றால்—மேன்மையேது? அறிவேது? குலமேது? நலமேது? வித்தையேது? எவரறிவர் காண்—மதிக்கின்ற உன்பதம் போற்றிலிவை யணுகுமோ மணவாள நாராயணன்—மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே வரத வேங்கடாாயனே—என்று பேசுகின்றது.

---

* மிடி-வறுமை.

பின்னும்,

"தாங்கொணு வறுமை வந்தால் சபைதனிற் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினர்க் காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணக்கஞ் செய்யும்
ஓங்கிய அறிவு குன்றும் உலகெலாம் பழிக்குந் தானே."

என்றொரு நீதிநூலும் டாம் டாம் அடிக்கிறது.

இந்தக் கொடும்பிணியைத் தாங்கமுடியாமையால் நமது புலவர் பெருமானுக்கு மகாராஜனைக் காணவேண்டுமென்றே இச்சை யுண்டாயிற்று. ஆகையால் அவர் மதுரைக்குச் சென்றார். சென்றவர், தாமிருக்கும் அந்தஸ்தை நோக்கி மகாராஜாவைக் காண வெட்கங்கொண்டு அந்த ஊரிலேயே பைத்தியம் பிடித்தவனைப்போலத் திரிந்து கொண்டிருந்தார். அப்போது ஒருநாள் பெரு மழை பெய்யத் தொடங்கியது. அந்த மழைக்கும் அதனாலுண்டான குளிருக்கும் மெத்தவும் வருந்தினர். அவற்றினின்றும் தம்மைக் காத்துக்கொள்ள அவருக்குத் தக்க ஆடையில்லை. பீற்றல் கந்தையையே எட்டுமெட்டாதபடி உடுத்திக்கொண்டிருந்தார். இப்படி அவர் குளிரினால் வருந்துக்கொண்டிருந்தபோது பாண்டியன் நகரசோதனைக்காக வெளிவந்திருந்தான். இவனுக்கு ஒரு சந்தேகமிருந்தது. ஒரு சமயம் இவன் நாரையைக்கண்டான். அதன் வாயைக் கவனித்து இந்தவாய்க்கு உபமானமாக எதைச் சொல்லலாமென்று நெடுநேரம் யோசித்தான் ; புலப்படவில்லை. தன் சமஸ்தானப் புலவர்களைக் கேட்டுப்பார்த்தான். அவர்களும் தக்க சமாதானஞ் சொல்லமுடியாதவரா யிருந்தார்கள். இந்தச் சந்தேகத்தோடு இவன் நமது சத்திமுற்றப் புலவர் தங்கியிருந்த இடத்தின் வழியே நகர் சோதனைக்கு வந்தான்.

அப்போது தற்செயலாய் ஒரு நாரை ஆகாயமார்க்க மாகப் பறந்து சென்றது. அதைக்கண்ட புலவர்,

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயும் நின் மனைவியுந் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின் எம்மூர்ச்
சத்திமுத்த வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே"

என்று பாடினர்.

இந்தப் பாடலைப் பாண்டியன் கவனித்துக் கேட்டான். இதில், தான் நாரையின் வாய்க்கு எதை ஒப்பிடலாம் என்று கொண்டிருந்த சந்தேகம் விளக்கப்பட்டிருந்ததைப்பற்றி மிகவுஞ் சந்தோஷித்தான். நாரையின் வாய் பிளவுண்ட பனங்கிழங்கைப்போ லிருக்கிறதென்று தெரிந்துகொண்டதோடு, இதைப்பாடியவர் ஒரு சிறந்த புலவராயிருக்கவேண்டுமென்றும் ஆனல் அவருடைய பாடலால் அவர் மிகவும் கொடிய தரித்திரநிலைமையைக்கொண்டிருக்கவேண்டுமென்றும் அறிந்துகொண்டான்.

இது உண்மையே. புலவர் படிய பாடலின் கருத்தென்ன? அதில் அவர் நாரையை நோக்கி, பனங்கிழங்கைப் பிளந்ததுபோலப் பவளநிறம் வாய்ந்த கூர்மையான வாயுடன் சிவந்த கால்களைக்கொண்ட நாரையே! நீயும் உன் மனைவியும் தெற்கேயுள்ள

கன்னியாகுமரி என்னும் புண்ணியதீர்த்தத்தில் நீராடி வடதிசையைநோக்கிப் போவீர்களானால் அங்கே எங்கள் ஊராகிய சத்திமுற்றத்தில் உள்ள தடாகத்தில் சிறிது தங்கி, அதனருகே ஈரச் சுவர்களோடு கூடிய ஒரு கூரை வீட்டில் ஒலிசெய்யும் பல்லியின் சொல்லை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எனது மனைவியைக்கண்டு நமது பாண்டிய மகாராஜனது ஆளுகைக்குட்பட்ட மதுரைமாநகரத்தில், கட்டக் கந்தையின்றி வாடைக்காற்றால் மெலிவடைந்து குளிரைத் தாங்கமுடியாமல் கைகளைக்கொண்டு உடம்பின் முன்புறத்தை மூடி, கால்களைக்கொண்டு பின்புறத்தைத் தழுவி, பெட்டியிலடைபட்ட பாம்பைப்போல் மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் உனது நாயகனைக் கண்டோம் என்று தெரிவியுங்கள் என்று தம்முடைய வறுமை நிலையை மிகவும் பரிதாபகரமாக விளக்கியுள்ளார்.

இதைக் கேட்ட பாண்டியன் சத்திமுற்றப் புலவரை ராஜ சபைக்கு வரவழைத்து "நீர் யார்? உமது தற்கால நிலைமை எவ்விதம்?" என்று கேட்டான். அதற்குப் புலவர் தமது ஊரும் பேருங்கூறி "வெறும்புற்கையும் அரிதாம் கிள்ளைசோறும் எம்வீட்டில் வரும் எறும்புக்கும் ஆற்பதம் இல்லை" என்றார். அதாவது "அரசே எங்களுக்கு வெறும்சோறு அகப்படுவதும் கஷ்டம், நாங்கள் வளர்க்கும் கிளிப்பிள்ளையும் சோர்ந்துபோகிறது. எங்கள் வீட்டிலுள்ள எறும்புக்கும் ஆதரவு கிடையாது" என்பதாம். இதைக்கேட்ட பாண்டியன் அவருக்கு ஆடையளித்து, அவரை ஒரு மடத்திலிருக்கச்செய்து நல்ல போஜன வகைகளால் உபசரித்து வந்தான். அவருக்குத் தெரியாதபடி ஆட்களைக்கொண்டு அவர் வீட்டை நல்ல சம்பத்துள்ள வீடாக்கினான்.

சிலநாள் பொறுத்துப் பாண்டியன் அவரையழைத்து "இனி நீர் உமது வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லி அவர் கையில் ஒரு பொருளும் கொடுக்காமல் அனுப்பிவிட்டான். அவரும் அரைமனதோடு தமது வீடுபோய்ச் சேர்ந்தார். தமது வீடானது பழையபடி

யிராமல் ராஜ மாளிகை போலிருக்கக்கண்டு ஆச்சரியப் பட்டு, "சொல்லாமலே பெரியர் எங் நன்மையுஞ் செய்வ ரென்பது சத்தியம் சத்தியம்" என்று ஆனந்த பரவச ரானார்.

பின்பொருசமயம் பாண்டியன் அவரை வரவழைத்து "உமது க்ஷேமம் எப்படி?" என்று வினவினன். அதற் குப் புலவர்,

"வெறும்புற்கையும் அரிதாம், கிள்ளை சோரும், என் வீட் டில் வரும், எறும்புக்கும் ஆற்பதம் இல்லைமுன்னாள்; என் இருங்கலியாம், குறும்பைத் தவிர்த்த குடிதாங்கியைச் சென்று கூடியபின், தெறும்புற் கொல்யானை கவளங் கொள்ளாமல் தெவுட்டியதே" என்று பாடினார்.

இப் பாட்டின் முதலடியையும் இரண்டாம் அடியில் பாதியையும் மேலே விளக்கினோம். பின்னுள்ளவையின் கருத்து என்னவென்றால் "வேந்தே! முன்னாளில் நான் இருந்தநிலை யுமக்குத் தெரியும், எனது பெரிய வறுமை யாகிய பொல்லாங்கை நிவர்த்திசெய்த குடிதாங்கி (என் குடியைத் தாங்கியவன்) ஆகிய உம்மைச் சேர்ந்தபிறகு கொல்லத்தக்க புலியைக் கொல்லுகின்ற யானையும், பசி யில்லாமையால், இடும் கவளத்தை உட்கொள்ளாமல் வாந் திசெய்து விடுகின்றது என்பதாம்.

அரசன் கேட்டு மிகவும் மகிழ்ந்து அவரைச் சன் மானித்தனுப்பினான். அவரும் அதுமுதல் க்ஷேமமாய் வாழ்ந்து வந்து தமது நாளைக் கழித்தார்.

பிள்ளைகளே! முன்காலத்தில் தமிழ்வித்துவான்களை அரசர்கள் ஆதரித்து வந்தார்கள். இப்போது அவர் களைக் கவனிப்பவர் ஒருவருமில்லை. இல்லாவிட்டாலும் படித்த பயன் வீணாவதில்லை. சமயோசிதமானபடி ஏதா வது வேலைத் திறத்தைக் காட்டிச் சுகமாகக் காலம் கழி த்து வருகிறார்கள்.

ஆகையால் படிப்பு எப்போதும் பலனைத் தரும். அதைநீங்கள் அலக்ஷியம் செய்யாமல் கற்றுவரமுன்னிற்க வேண்டும்.

# அகங்காரம்.

(298-ம் பக்கத்தொடர்ச்சி)

உத்தரனென்பவன் விராடராஜனுடைய புத்திரன். இவன் இளங்குழந்தையா யிருக்கும்போதே இவனிடத்தில் அரசர்க்குரிய பராக்கிரமம், டாம்பீகம், சொற்சாதுரியம் முதலிய குணங்கள் தலையெடுத்துவந்தன. தாய் தந்தையர்க் கடங்கி அவர்களிடத்தில் மிக்க விசுவாசத்தைப் பாராட்டி வந்தான். இளங்கன்று பயமறியா தென்கிறபடி சிற்சில சமயங்களில் இராஜாங்க விவகாரமும் தெரிந்தவன்போல் வசனித்து வருவான். இதைக் கண்ட எல்லோரும் "இவன் ஒரு போர்வீரனாவான்" என்று கொண்டாடுவார்கள். எந்த விஷயத்தையும் இவ்வரசிளங் குமரன் "இது எனக்கென்ன வரவா செலவா?" என்று எடுத்தெறிந்து பேசுவான். முன்பின் பார்க்கவேண்டுமென்கிற குணத்தை அடியோடு மறந்திருந்தான். ஆனால் துஷ்ட விவகாரங்களில் பிரவேசித்து வீணான சண்டை சச்சரவுகளை விலைக்கு வாங்கி வரமாட்டான். நல்ல பழக்கங்களையே மேற்கொண்டு வந்தான். இவனைப் பிரியமாய்க் கண்ணெடுத்துப் பாராதவர் ஒருவருமில்லை. இவன் பேசும் பேச்சு யாவரையும் மகிழ்வடையச் செய்யும். பெற்றோர் இவனைத் தங்கள் கண்போலும் உயிர்போலுங் கருதி ஆதரித்து வந்தார்கள். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்னும் பழமொழியை இவன் நல்ல காரியத்திலே நிலைநாட்டி வந்தான்.

பிஞ்சிற் பழுத்தவன் என்று சிலரிவனைப் பரிகாசஞ் செய்வதுமுண்டு.

இந்தக் காலத்தில் விராட ராஜனிடத்தில் பாண்டவர்கள் தாங்கள் மறைந்து வாழவேண்டிய ஒரு வருஷ அஞ்ஞாதவாசத்தைக் கழித்து வந்தனர். அப்போது துரியோதனன் இவர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து வந்தான். ஒன்றும் அவனுக்குக் கைகூடவில்லை. சர்ப்பக் கொடியை யுடைய வணங்கா முடி மன்னனாகிய துரியன் தன் சபையிலுள்ள பெரியோரைப் பார்த்து "நீங்கள் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர்கள். அப்படியிருந்தும் எனது பகைவர்களான பாண்டவர்களை நான் கண்டுபிடிக்கும் உபாயத்தைத் தெரிந்து சொல்ல அசக்தர்களா யிருக்கிறீர்கள். இது எனக்குப் பெருத்த வியாகூலத்தைத் தருகின்றது" என்று முறையிட்டான்.

இவ் வசனத்தைக் கேள்வியுற்ற சபையோர் தீர்க்காலோசனை செய்து காவலனை நோக்கி "அரசே! பாண்டவரைக் கண்டுபிடிக்க உபாயமொன் றிருக்கிறது. அவர்கள் எங்கிருக்கிறார்களோ அங்கே பூமி செழித்திருக்கும். சகல வளங்களுந் தழைத்திருக்கும். அப்படிப்பட்ட இடம் எதுவென்று தேடிப் பார்த்து ஆராய்வோமானால் அவர்களை எப்படியும் கண்டுபிடித்து விடலாம்" என்றார்கள்.

துரியோதனன் அவர்கள் சொல்லியபடி பூமியில் பல பாகங்களிலும் ஆள்களை விடுத்து, எந்தப் பாகம் எல்லாவளங்களிலும் புஷ்களமா யிருக்கிறதென்பதைக் கண்டு வர உத்தரவு செய்தான். பூமியின் நாலாபக்கமும் போன

தூதர்களிலனேகர் "நாங்கள் போய்ப்பார்த்த இடமெல்லாம் நமது நாடுபோலவே வளத்தில் குறைவடைந் திருக்கக் கண்டோம்" என்று கூறிவிட்டார்கள். நாடு செழிப்பதும், க்ஷீணிப்பதும் அரசரால் என்பது பிரசித்தமல்லவா? எந்த அரசன் நீதிவழுவாமல் இராஜரீகம் செய்கிருனே அந்த வேந்தனுடைய நாடு குறைவில்லாததாயிருக்கும். அநீதி பொருந்திய தேசம் பசி, பிணி, கொலை, களவு, துராகிருதம் இவற்றால் நலிவுபெற்றிருக்கும். துரியோதன மகாராஜனிடம் துர்க்குணங்களே குடிகொண்டிருந்தபடியால அவன சார்பைப் பெரிதுந் தழுவிய சிற்றரசரின் நாடுகள் எப்படி மேம்படும்? ஆனால் சிலதூதர்மட்டும் நல்லசமாசாரத்தைக் கொண்டுவந்தார்கள். அவர்கள் துரியோதனனை நோக்கி "மகாப்பிரபுவே! நாங்கள் பார்வையிட்டுவந்த தேசங்களுள் விராடதேசம் எல்லாவளத்திலும் சிறப்புற்றிருக்கிறது. அதற்கிணையாக வேறெத் தேசமுங் காணப்படவில்லை" என்றார்கள்.

இந்த உளவையறிந்த துரியோதனனுடைய சபையிலிருந்த பெரியோர்கள் "பாண்டவர்கள் விராடதேசத்தில் தான் இப்போது வசித்துவருகிறார்கள். அவர்களிருக்குமிடம் எப்போதும் செம்மையாயிருக்கும். தருமத்தைக் கடவாதவர்களன்ரு அவர்கள்? நாம் அவர்களை எப்படியும் அந்த தேசத்தில் கண்டுபிடித்துவிடலாம். இதற்கு நாம் விராடராஜனை வலுவில் போர்க்கிழுக்கவேண்டும். நமது சைனியங்களை அவனுடைய எல்லையின் நாற்புறத்தும் அனுப்பி அவனுக்கு நலத்தைச் செய்துவரும் மாடுகளை மடக்கி நம்வசப்படுத்திக் கொண்டுவருவோமானால் அவன் நம்முடன் சண்டைசெய்யத் துணிவான். அத் துணிவு நம்முன் பயன்படாதென்பது அவனுக்கு நன்ருய்த் தெரியும். ஆகையால் பாண்டவர்கள் அவனிடம் மாறு வேடம் பூண்டு வந்திருந்தால் அவர்களைத்தான் அவன் நம்மிடம் யுத்தஞ்செய்ய அனுப்புவான். அவர்களும் அவனை ரக்ஷிக்கவேண்டி நம்மை யெதிர்ப்பார்கள். அப்போது அவர்களை நாம் கண்டுபிடித்து, உடன்படிக்கையின்படி மறுபடி

யும் வனவாசத்துக்கே துரத்திவிடலாம். இதைவிட வேறு உபாயம் எங்களுக்கு இப்போது தோன்றவில்லை" என்றார்கள்.

குருடன் மகனாகிய துரியோதனன் இப்பேச்சைக் கேட்டுக் குதுகலங்கொண்டு அவ்வாறே தன் சேனைகளை விராட தேசத்தின்மீது வம்புசெய்யவனுப்பினான். சேனைகள் நான்குதிக்கிலும்பரவி ஆங்காங்கிருந்த பசுமந்தைகளை மடக்கலாயின. அப்போது விராடராஜனுடைய வேண்டுகோளால் வேஷதாரிகளாயிருந்த பாண்டவர்கள் அந்தப் படைகளை மூன்றுபக்கத்திலும் எதிர்த்து அதமாக்கிப் பசுமந்தைகளை மீட்டுக்கொண்டுவந்தனர். ஆனால் துரியோதனன் தன் சபைத்தலைவர்களோடு விராடதேசத்தில் போரிட எந்தப்புறம் வந்திருந்தானோ அந்தப் புறத்துக்கு யாரை அனுப்புகிறதென்ற பிரஸ்தாபம் விராடனுடைய சபையில் நடைபெற்றுவந்தது. அந்த வேளையில் உத்தரனும் அங்குவந்திருந்தான்.

உத்தரன் அங்கு வருவதற்குச் சற்று முன் ஒரதிசயம் நடந்தது. அவன் தன் மாளிகையின் அந்தப்புரத்தில் கையில் ஒரு பிரம்பை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான். அந்தப்புரத்தின் சுவருகளின்மேல் பற்பல வுருவங்கள் பலவகைப்பட்ட வர்ணங்களால் வெகு அலங்காரமாகத் தீட்டப்பட்டிருந்தன. ஒருபுறம் போர் வீரர்கள் கைகளில் ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு யுத்தசன்னத்தரா யிருப்பதுபோல் எழுதப்பட்டிருந்தது.

இவ்வுருவங்களை நமது உத்தரன் உற்றுநோக்கினான். அருகிலிருந்த பணியாளைநோக்கி "இதென்ன அதிசயம்?' என்று கேட்டான். சேவகன் "இளவரசே! இவர்களெல்லாம் யுத்தவீரர்கள். சண்டைசெய்கிறார்கள்" என்று சொன்னான்.

"அப்படியா? சண்டையில் மகா கெட்டிக்காரர்களோ இவர்கள்! நல்லது இவர்களுடைய வீரத்தன்மையை இதோ பார்க்கிறேன்" என்று தன் கையிலிருந்த பிரம்பால் அந்த வுருவங்களைத் தட்டிப்பார்த்தான் உத்தரன்.

அவைவாய்திறந்து ஒன்றுஞ் சொல்லவுமில்லை, திருப்பி அவனை அடிக்கவுமில்லை. இதைக்கண்ட சிறுவன் குலுங்கக்குலுங்க நகைத்து "இவர்களேயல்ல—இந்த உலகத்தில் வீரரென்று பேர் வைத்துக்கொண்டிருக்கும் எல்லோருமே என் கைப்பிரம்பின்முன் நிற்பார்களென்று எனக்குத் தோற்றவில்லை. என்னைக் கண்டமாத்திரத்தில் வாய் பொத்திக் கைகட்டி இப்படியப்படி அசையாமல் நின்றுவிடுவார்கள். இதில் சந்தேகமென்பதே கிடையாது" என்று ஆரவாரித்தான்.

உத்தரன் இந்த அதிசயங்கண்டபின் கொலுமண்டபத்திற்குவந்தான். தன் தந்தை துரியோதனனை யெதிர்க்க யாரை அனுப்பலாம் என்று பேசிக்கொண்டிருக்கும சங்கதி தன் காதில் விழக்கேட்டான். உடனே தன் பிதாவை வணங்கித் "தந்தாய்! நானிருக்கும்போது தாங்கள் ஆயாசப்படுவானேன்? எப்படிப்பட்ட இரணவீரராலும் என் சிறு பிரம்புக்குப் பதில் சொல்லமாட்டார்கள். அந்த விநோதத்தைச் சோதித்துவிட்டேன். ஆகையால் நானே போய் அந்தத் துரியோதனனையும் அவனுடன் வந்தவர்களையும் எதிர்த்து எமலோகஞ் சேர்த்துவிட்டு வருகிறேன். வேறெவரும் போகவேண்டாம். எனக்கு ஒத்தாசையும் வேண்டியதில்லை. சீக்கிரம் விடைதர வேண்டும்" என்று பதைபதைத்தான்.

பிள்ளை இப்படி தைரியமாகப் பேசுவதைச் செவி குளிரக் கேட்ட விராடன் ஆநந்த பரவசனானான். சபையோரைப் பார்த்து இப்போதன்றோ நான் பிள்ளைபெற்ற பேற்றைப் பெற்றேன்.

* "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற."

என்னும் வாக்கியம் சத்தியமானதே. ஒன்றைத் தாங்கத் தூண் ஆதாரமாவதுபோல நமது குறைகளைத்

* ஒருவன் பெறக்கூடிய பாக்கியங்களுள் அறியவேண்டியவற்றை அறியக்கூடிய மக்கள் பாக்கியத்தை யடைவதினும் மற்ற பாக்கியங்களடைவதை நாம் மதிப்பதில்லை.

தாங்கி முடிப்பதற்குப் பிள்ளைகள் ஏற்படுவதினாலல்லவா அவர்களுக்கு * 'மதலை' என்றொரு சிறப்புப் பெயர் ஆன்றோரிட்டனர். இனி யென் கவலை ஒழிந்தது என்றான்.

அப்போது அச் சபையில் கங்குபட்டராயிருந்த தருமர் "அரசே! நீர் சொல்வது உண்மைதான். ஆகிலும் நமது அரசிளங்குமாரன் இன்னும் உலகவழக்கில் பழகவேண்டி யிருத்தலால் நம்மிடமுள்ள பேடியைத் துணையாகக் கூட்டி யனுப்புவது நலம்" என்றார். பையன் "எனக்கேன் துணை? என் வீரத்தை நான் முன்னரே எடுத்தோதவில்லையா?" என்றான்.

"ஆம் அப்பா! அதுபற்றியே உன்னுடன் ஒன்றுக்கு முதவாதபேடியை யனுப்பச் சொல்லுகிறேன். உன் ரதத்தை நடத்தவாவது ஒரு சாரதி வேண்டியது அவசியமன்றோ?" என்றார்.

பேடியுருவந் தாங்கியிருப்பவன் அருச்சுனன் என்பது விராடனுக்காவது அவனைச் சேர்ந்தவர்களுக்காவது அப்போது தெரியாது. தருமர் சொன்னதை விராடன் ஒப்புக்கொண்டு இரதமொன்று சித்தப்படுத்தி இருவரையும் எதிரிகளிடம் போர்புரியக் கூட்டியனுப்பினான்.

யுத்தகளத்தை வெகுதூரத்திலிருந்து கண்டதும் உத்தரனுக்குப் பயந்தோன்றிற்று. "நாம் வீட்டில்பார்த்த வீரர்கள் அசைவின்றியிருந்தனர், இவர்களோ அசைவதோடு பேரிரைச்சலுமிடுகின்றார்களே; இவர்களை நான் எப்படி எதிர்க்கமுடியும்" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணிக் கலங்கினான். அவனை அர்ச்சுனன் முன்வைத்தகாலைப் பின்வைக்கலாகாதென்று வற்புறுத்தினான். அதற்கு நம் உத்தரன் பேடியாகிய அர்ச்சுனனை நோக்கி,

**கீர்த்தனை. (பாரதம்)**

**பல்லவி.**

நானென்ன சண்டைக்கு வருவதென்ன எச்சு—
நடவாதினியுன் பேச்சு. (நா)

* மதலை - தூண்.

### அநுபல்லவி.

ஆனாலும் படையாநீ டாழிபோல் துலங்குது
அப்பா திரும்பிப் பார்த்தால் கர்ப்பமுங் கலங்குது (நா)

### சரணங்கள்.

1. நாடும் எனது போன மாடும் எனது வந்த
நஷ்டமும் எனதாச்சே உனக்கென்ன—
பாடிப் படைமேற் செல்ல நீ ஏதோ எனைமோசம்
பண்ண அழைக்கின்றாய் வேறில்லையே யுன்ன—
நாடகத் தொழில் செய்யும் பேடி உன்றனுக் கேனோ
ராஜ காரியம் நீதி பேசவும் நீ தானோ
மூடும் இவர்க்கெதிரே நாடிச்செல்வது நானோ
முப்புரத்தையும் எரித்த தற்பரனும் வருவானோ. (நா)
2. வரும் எதிரி பலமும் தன் பலமும் கால
பலமும் தெரிந்திடாமல் போர் முந்தக்
கருதினால் பிள்ளையார் பிடிக்கக் குரங்கான
கதையாம் என்றறியாயோ கேளந்த
நரபாலர் சேனைக்குள் நானகப்பட்டால் எள்ளை
நசுக்கிறாப் போல்நசுக்கி நகையாரோ என்ன கொள்ளை
ஒருதனஞ் சயனென்றால் உற்றிடா தொரு சள்ளை
உண்டைவில் கையிற்பிடித்துக் கொண்டுவிளையாடும் பிள்ளை.
3. பதிகொடுக்கிறேன் நின் சொற் படி நடக்கிறேன் நின் நட்
பையும் மறவேன் நிற்ப தொரு கோடி
நிதி கொடுக்கிறேன் கரி பரிகொடுக்கிறேன் என்னை
நீ விட்டுவிடவேணும் அடி பேடி
எது எப்படி கெட்டாலும் எனக்கென்ன நீயோது
என்வாய் கொழுப்பே எனக்கிவ் விடர் வாய்த்தற் கேது
ததியிது மகாராஜி தயவு செய்தே என் மீது
தாயாரிடத்திற் சேர்த்தால் நீயே தெய்வம் இப்போது. (நா)

என்று அழுது கதறினான்.

"பார்த்தீரா உத்தரன் பராக்கிரமத்தை. அதுபோல் எதிரியின் பலத்தை நாம் தெரிந்துகொள்ளாமலே எதிர்க்க எத்தனப்படுவது இதுபோல் முடியும். பிறகு உமதிஷ்டம்" என்று சேவகன் கூறினான்.

பலராமர் "இந்த நியாயமெல்லாம் எனக்கு நீ சொல்லவேண்டிய தில்லை" என்று தமது சைனியத்தை ஒன்றுதிரட்டி ஆஞ்சநேயர் மீது ஏவினார். அவர் அச்

சேனையுடன் சிறிதுநேரம் விளையாடிக் கொண்டிருந்து பிறகு தமது வாலினால் அவ்வளவு சேனைகளையும் இறுக்கிக்கட்டி "இதோ உங்களை இப்போதே சமுத்திரத்திற் கிரையாக்குகிறேன் பாருங்கள்" என்று ஆகாயத்திற் கிளம்பினார். சேனைகள் குய்யோமுறையோ வென்று ஆரவாரித்துப் பலராமரை நோக்கி உடனேவந்து எங்களை ரக்ஷியும் என்று கூக்குரலிட்டனர்.

பலராமர் இந்த வேடிக்கையைப் பார்த்துப் பிரமித்து "அடடா இதுசாதாரண குரங்கல்ல-நாம் தப்பாக எண்ணினோம். இதைவெல்ல யாரால்முடியும். ஐயையோ நமது சேனைகள் முற்றும் அநியாயமாய் மாண்டுபோகிறதே. நம்மிலும் பலசாலியுலகத்தில் இல்லையென்று இறுமாந்திருந்தோமே. இப்போது நமது சேனைகளைக் காப்பாற்றவும் நமக்குப் பயமாயிருக்கிறதே. இனி நாம் அகங்காரம் படைப்பது அழகல்ல. **வல்லானுக்கு வல்லான் மண்ணிலும் உண்டு வானிலும் உண்டு**" என்று சிந்தித்து, ஆஞ்சநேயரை நோக்கி "ஐயா! சரணம். சரணம். எங்கள் பிழையமன்னித்து, சேனைகளை ரக்ஷித்தருளும். இனி நாங்கள் அதிக்ரமித்து யாதொரு தீங்கும் செய்யோம். தங்கள் விருப்பத்தின்படி நந்தவனத்திலிருந்து வேண்டிய கனிவர்க்கங்களை நிராடங்கமா யனுபவியும். ஸ்ரீராமமித்திரரே உமக்கு வந்தனம். வந்தனம்" என்று புகழ்ந்து போற்றினார். உடனே அஞ்சனைச் செல்வரும் சாந்தமடைந்து சேனைகளை விட்டுவிட்டு நந்தவனம் போய்ச் சேர்ந்தார்.

பிறகு பலராமர் இந்த விசேஷத்தைக் கிருஷ்ண மூர்த்திக்குத் தெரிவித்தார். அவரவ்வானர சிம்மத்தைப் பார்க்கவேண்டுமென்று தம்மிடமுள்ள கருடபகவானை நோக்கி "இப்போதே நந்தவனம்போய் அங்குப் புதிதாய் வந்திருக்கும் வானரத்தை நாம் அழைத்ததாக அழைத்துவரவேண்டும்" என்று கட்டளையிட்டார். (வரும்)

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை.

TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY, ST., M A DRA

186459
சென்னை-600 008